## சுருக்கம்

தேசிய ஊரக சுகாதார திட்டம் – 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் வலி மற்றும் நோய் தடுப்பு பராமரிப்பு மையங்களை தோற்றுவிக்கப்பட்டது – புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு 2018 – 2019 ஆம் ஆண்டிற்கான சம்பளம் மற்றும் இதர படிகள் வழங்குவதற்கு தேவைப்படும் நிதி – ஒதுக்கீடு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி II-1) துறை

அரசாணை(நிலை) எண். 545

நாள்: 22.11.2018
விளம்பி, கார்த்திகை–6
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்க:

1. அரசாணை எண் 19, ம.ந.(ம)கு.ந.துறை , நாள் 12.01.2018.
2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடித ந.க.எண். 14560/வ.செ/1/2018, நாள் 07.06.2018.

*****

**ஆணை:**

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் கீழுள்ள, 8 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளில் வலி மற்றும் நோய் தடுப்பு பராமரிப்பு மையங்களை தோற்றுவித்து, பல்வேறு இனங்களுடன் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்திற்கு 8 மருத்துவர் பணியிடங்களும், 11 செவிலியர் பணியிடங்களும், புதியதாக தோற்றுவிக்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் கண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கடிதத்தில் மேற்காணும் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 8 உதவி மருத்துவர் பணியிடங்கள் மற்றும் 11 செவிலியர் பணியிடங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன என்றும் பூர்த்தி செய்யப்பட்ட 8 உதவி மருத்துவர் மற்றும் 11 செவிலியர் பணியிடங்களுக்கு 2018–2019ம் நிதியாண்டில் சம்பளம் மற்றும் இதர படிகள் வழங்குவதற்கு ஏதுவாக 10 மாதங்களுக்கு மட்டும் தேவைப்படும் சம்பளம் மற்றும் இதர படிகளுக்கு ரூ.1,00,78,000/– (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தெட்டாயிரம் மட்டும்) 2018–2019ம் நிதியாண்டில் புதிய கணக்குத் தலைப்பின் கீழ், கூடுதல் நிதியாக வழங்குமாறும் மேலே அனுமதிக்கப்பட்ட செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2018-2019ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யவும், அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி அரசினால் அனுமதிக்கப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட உரிய அனுமதி வழங்கிடவும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2ல் உள்ள மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரகத்தின் கீழ் பணிபுரியும் 8 மருத்துவ பணியிடங்கள் மற்றும் 11 செவிலியர் பணியிடங்களுக்கு, 2018–19 ம் நிதியாண்டிற்கான சம்பளம் மற்றும் இதர படிகள் 10 மாதங்களுக்கு மட்டும் ரூ.1,00,78,000 (ரூபாய் ஒரு கோடியே எழுபத்தெட்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்.

"2210 மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 நகரப் பகுதி சுகாதாரப் பணிகள் – ஆங்கில முறை மருத்துவம் – 110 – மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – மாநிலச் செலவினங்கள் – EI மாவட்ட தலைமையிட மருத்துவமனைகளில் செயல்படும் வலி மற்றும் நோய் தடுப்பு பராமரிப்பு மையங்கள் 01 சம்பளங்கள்".

(த தொ கு 2210 – 01 – 110 – EI – 0106)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2018 – 2019 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி, மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் பத்தி 3ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018 – 2019 ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (சுகாதாரம் – 2)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.57049/Health-II/18, நாள்:22.11.2018. இசைவு உடன் மற்றும் கூடுதல் ஒப்பளிப்பு பேரேடு எண்.2001 (இரண்டு ஆயிரத்து ஒன்று) பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்:
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை– 6
மாநிலக் கணக்காயர் (கணக்கு), சென்னை–18
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35 / சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்:
குழும இயக்குநர், தேசிய சுகாதார குழுமம், சென்னை – 6.
நிதித் (சுகாதாரம் – II / வ.செ.பொது I& II) துறை, சென்னை–9
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டேட்டா செல்) துறை, சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்